# எழுதி வளர்ந்த இயக்கம்

திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...


■ பேராசிரியர் சுப.வீரபாண்டியன்

24

## ‘இதோ, எங்கள் திராவிடக் கவிஞன்!’

கவிதை என்பது மொழியின் சொத்து. அதனை ஆற்றலோடு கையாளும் கவிஞர்கள், ஓர் இயக்கத்துக்குக் கிடைத்து விட்டால், அவர்களே அந்த இயக்கத்தின் சொத்து.

‘மொழியைப் பயன்படுத்துவதில் இன்னொரு வகைதான் கவிதை’ (*Poetry is the other way of using language*) என்று அகராதிகள் விளக்கம் சொல்லும். ‘உருவில் சுருக்கம், கருவில் பெருக்கம்’ இதுதான் கவிதை என்பார் கவிஞர் பொன்.செல்வ கணபதி. இந்த இலக்கணங்களுக்கெல்லாம் மிகப் பொருத்தமானவராக, இயக்கத்தின் கருத்துகளைத் தன் கவிதைகளில் எடுத்துரைத்தவராக, நமக்குக் கிடைத்த மாபெரும் கவிஞர்தான் பாரதிதாசன்!




நம் புரட்சிக் கவிஞர் குறித்து ‘பகுத்தறிவு இயக்கத்தில் பாரதிதாசன்’ என்னும் சிறிய நூல் ஒன்றினை, புலவர் செந்தலை ந.கௌதமன் அவர்கள் எழுதியிருக்கிறார். சூலூரில் உள்ள அறிவுநெறிப் பதிப்பகம் இதனை வெளியிட்டு இருக்கிறது.

### புத்தகம் சிறிது... சிறப்புகள் பெரிது...

50 பக்கங்களில் இவ்வளவு செய்திகளை எழுதி விட முடியுமா என்று படிப்பவரை வியக்க வைக்கிறது இந்நூல். ஆழமான செய்திகள், அருமையான மொழிநடை, தெரிந்து கொள்ள வேண்டிய இயக்கக் கவிஞனின் வரலாறு என்று பல சிறப்புகளை இந்த நூல் தன்னுள் கொண்டிருக்கிறது.

புரட்சிக் கவிஞரின் எழுச்சியும் உணர்ச்சியும் மிகுந்த கவிதைகளை நாம் படித்திருக்கிறோம். தி.மு.க. மேடைகளில் கேட்டிருக்கிறோம். ஆனால், அவர் இந்தக் கருத்தியலுக்கு வருவதற்கு முன்பு, பக்திப் பாடல்களையும், கதர் ராட்டினப் பாடல்களையும் பாடிக்கொண்டிருந்தவர் என்பது பலரும் அறியாத செய்தியாக இருக்கக்கூடும். அந்தப் பாடல்களை எல்லாம்கூட எடுத்துக்காட்டி, அதன் பிறகு அவருக்குள் நிகழ்ந்த மாற்றங்களைக் காலவரிசையோடு விளக்கி, இந்தச் சிறுநூலை எழுதி இருக்கிறார் புலவர் செந்தலை கௌதமன்.

### கடவுள், காந்தி, கதர்!

1891-ஆம் ஆண்டில் பிறந்த பாரதிதாசன் அவர்களிடம், 1927-ஆம் ஆண்டு வரை காந்தியார் பற்றும், கதர் பற்றும், மேலும் ஓரிரு ஆண்டுகள் கடவுள் பற்றும் இருந்தன.

அப்போது அவர் ஸ்ரீ சண்முகன் வண்ணப் பாட்டு, ஸ்ரீ சிவசண்முகன் கடவுள் பஞ்சரத்தினம், ஸ்ரீ மயிலம் சுப்பிரமணியர் துதியமுது போன்ற பக்தி நூல்களையும், கதர் ராட்டினப் பாட்டு, சிறுவர் சிறுமியர் தேசிய கீதம் போன்ற தேசிய பாடல்களையும் எழுதி இருக்கிறார். அவற்றில் இருந்தும்கூட, சில வரிகளை இந்த நூலில் ஆசிரியர் எடுத்துத் தந்திருக்கிறார்.

“கற்பகப் பொதும்பரிடைக் குயில் பாடும்/ கலாபமயில் ஓடி அங்கு நடமாடும்/ மிக நற்றருக்கள் வாசமலர் உட்குடைந்து தேனினங்கள்/ பொற்பொடியைச் சூறையிடும்/ அற்புதம்கொள் வான்மயிலம்”

என்னும் வரிகளைப் படிக்கும் போது, இவை பாரதிதாசனின் பாடல் வரிகள் என்று யாரும் எண்ணவே மாட்டார்கள்.

### இனி நமக்கில்லை தீபாவளி!


செந்தலை ந.கௌதமன்

ஒருவேளை, தந்தை பெரியாரை பாரதிதாசன் சந்திக்காமலேயே இருந்திருந்தால், இவை போன்ற பாடல்களைத் தொடர்ந்து எழுதி, இன்னொரு அருணகிரி நாதராகத்தான் வந்திருப்பார் என்று செந்தலை கௌதமன் கூறுகிறார். ஆனால், அவருக்குள் முதல் மாற்றத்தை பாரதியார் ஏற்படுத்துகிறார்.

பண்டித நடையில் இருந்து அவரை விடுவித்து, எளிய தமிழ் மொழிநடையில் கவிதைகள் எழுத பாரதியாரே காரணம் ஆகிறார். அதனால்தான் கனக சுப்புரத்தினம் என்னும் தன் பெயரை, பாரதிதாசன் என்று, நம் கவிஞர் மாற்றிக் கொள்கிறார்.

இரண்டாவது மாற்றத்தையும், நிரந்தரமான ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தியவர் பெரியார். பெரியாரின் உரைகள் கேட்டும், பெரியாரின் தொடர்பு கிடைத்ததும், பாரதிதாசன் முழுமையாகப் பகுத்தறிவுக் கவிஞராக மாறிவிடுகிறார். 1928-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் இந்த மாற்றம் நிகழ்ந்ததாய், நூலாசிரியர் குறிப்பிடுகிறார். தீபாவளிக்குப் புது ஆடை எடுக்கப் போகலாமா என்று வீட்டில் கேட்டபோது, “இனி நமக்குத் தீபாவளி இல்லை, இனிமேல் எப்போதும் இல்லை” என்று புரட்சிக் கவிஞர் உறுதிபடக் கூறுகிறார். அன்று நிகழ்ந்த அந்த மாற்றம் அவர் வாழ்நாளின் இறுதிவரையில் நீடித்தது.

> **இவரை நாம் ‘புரட்சிக் கவிஞர்’ என்றும், ‘பாவேந்தர்’ என்றும் அழைப்பதைக் காட்டிலும், ‘திராவிடக் கவிஞர்’ என்றே அழைக்கலாம். அது மிகவும் பொருத்தமான அடைமொழியாக!**

பாரதிதாசனால் திராவிட இயக்கமும், திராவிட இயக்கத்தால் பாரதிதாசனும், பயனும் புகழும் பெற்றனர்.

### பல ‘முதல்’களுக்குச் சொந்தக்காரர்

திராவிடக் கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்வதில் பாரதிதாசனுக்குப் பெரும் பங்கு இருந்தது. அவர் இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களையும் கையாளும் ஆற்றல் மிக்கவராக இருந்தார்.

தமிழில் முதல் கவிதை இதழ் நடத்தியவர் இவர்தான். நாடகம் எழுதிய முதல் தமிழ்க் கவிஞரும் இவர்தான். குடும்பக் கட்டுப்பாடு பற்றி, இந்திய மொழிகளிலேயே முதன்முதலில் பாட்டு எழுதிய பெருமையும் இவருக்கு உண்டு. திரைப்படத் துறையில் அடியெடுத்து வைத்த திராவிட இயக்கத்தின் முதல் எழுத்தாளர் பாரதிதாசன்தான்.

அவ்வையார், பாரதியாரைத் தொடர்ந்து, ஆத்திச்சூடியும் இவர் எழுதியிருக்கிறார். தொட்ட இடமெல்லாம் திராவிடச் சிந்தனைகள் மணக்கும் எழுத்துக்குச் சொந்தக்காரர் நம் புரட்சிக் கவிஞர். எனவேதான், இவரை நாம் ‘புரட்சிக் கவிஞர்’ என்றும், ‘பாவேந்தர்’ என்றும் அழைப்பதைக் காட்டிலும், ‘திராவிடக் கவிஞர்’ என்றே அழைக்கலாம். அது மிகவும் பொருத்தமான அடைமொழியாக!

-வாசிப்போம்

---

## :ப்ளாஷ்பேக்



### கடனில்லா கிளை!

திருச்சி, பொன்மலையில் கிளைப் பொருளாளராகப் பணியாற்றிய போது, கிளைக் கழகம் சார்பாக ஏற்பாடு செய்திருந்த கூட்டத்துக்கு 1958 செப்டம்பர் பேரறிஞர் அண்ணா வருகை தந்தார். அப்போது ‘உங்கள் கிளையில் கூட்டச் செலவுக்குப் போக பாக்கிப் பணம் உள்ளதா?’ எனக் கேட்டார். பொருளாளராக இருந்த நான் ரூ.12.50 இருப்பதாகக் கூறினேன். கிளைக் கழகங்கள் எல்லாம் கடனில் ஓடும் வேளையில், பாக்கி வைத்திருந்த எங்கள் கிளையைப் பாராட்டினார். யதார்த்தமாக எங்களுடன் உரையாடிக் கொண்டிருந்தவர், புகைப்படம் எடுக்கலாம் என்றபோது கழட்டி வைத்திருந்த சட்டையைப் போட்டுக்கொண்டு எழுந்து நின்றார். அப்போது அண்ணாவுடன் நாங்கள் அனைவரும் எடுத்துக்கொண்ட புகைப்படம்.


பாலசுப்பிரமணியன்

**-கோ.பாலசுப்பிரமணியன், ஒன்றிய அவைத் தலைவர், திருவெறும்பூர்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## திராவிட இயக்க இதழ்கள் - ‘பறையன்’!

திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரான ‘திவான் பகதூர்’ தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களால், 1893-ஆம் ஆண்டு அக்டோபர் 7- ஆம் தேதி தொடங்கப்பட்டது ‘பறையன்’ இதழ். ஆரம்பத்தில் மாத இதழாக மலர்ந்த இந்த இதழ், ஓர் ஆண்டிலேயே வார இதழாக உருவெடுத்தது.




இரட்டைமலை சீனிவாசன் தனது சுயசரிதையான ‘ஜீவிய சரித்திர சுருக்கம்’ நூலில், இந்த இதழைத் தொடங்கியதற்கான நோக்கத்தை இவ்வாறு தெரிவிக்கிறார்: “1818- ஆம் வருஷம் இவ்வினக் குடியானவர்கள் முன்னேற்றமடைய வழிவகைகளைத் தெரிவிக்கும்படி கலெக்டர்களை ரெவினியூ போர்டார் கேட்டிருந்தார்கள். அது எப்படியாயிற்றென்று தெரியவில்லை. 1893-ஆம் வருடம் கல்வி கற்பித்துக் கொடுக்க தலைப்பட்டார்கள். 120 வருஷம் தூண்டுவாரற்று இருந்தார்கள். 1893-ம் வருடம் சர்க்கார் வெளியிட்ட உத்தரவை ஒரு சிலாசாசனமாய், இவ்வினத்தார்கள் எண்ணினாலும் பலிதபடாமல் போய்விட்டது. அதற்கடுத்த படியாகத்தான் 1893- ஆம் வருடம் ‘பறையன்’ என்ற பத்திரிகையைத் தூண்டுகோலாக வெளியிட்டேன்”.

இந்த இதழில் கல்வி தொடர்பாக நிறைய படைப்புகள் வந்துள்ளன. குறிப்பாக, ஆங்கிலேயர் அரசு 1893-ஆம் ஆண்டு கல்விக்காக ஒரு வரைவை, ‘அரசாணை - 68’ என்ற பெயரில் கொண்டு வந்தார்கள். அந்த வரைவு தொடர்பான பதிவுகள் இந்த இதழில் விரிவாகக் கிடைக்கின்றன. அந்த அரசாணையில், தாழ்த்தப்பட்டோருக்காகத் தனிப் பள்ளிகளைத் தொடங்குவது, பிற பள்ளிகளில் படிக்கும் தாழ்த்தப்பட்டோர் குழந்தைகளுக்குக் கட்டணச் சலுகை போன்றவை பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவை குறித்து ‘பறையன்’ தொடர்ந்து எழுத, அன்றைய சென்னை உள்ளாட்சி நிர்வாகம் தனிப் பள்ளிகளை உருவாக்க உத்தரவிட்டதாக ஆய்வாளர் ஸ்டாலின் ராஜாங்கம் தன் படைப்பு ஒன்றில் தெரிவிக்கிறார்.

1890 வரை தொடர்ந்து ஏழு ஆண்டுகள் வெளிவந்த இந்த இதழில், உலகச் செய்திகள், உள்ளூர் அரசியல், வாசகர் கடிதங்கள் உள்ளிட்ட விஷயங்கள் இடம்பெற்றிருந்ததாக அறிய முடிகிறது.

---

## கருவூலம் இணைப்பு பேச்சுவார்த்தை!

**1979- ஆம் ஆண்டு தி.மு.க.வுடன் அ.தி.மு.க.வை இணைக்க முயற்சி நடைபெற்றது. ஜனதா கட்சித் தலைவர் பிஜூபட்நாயக் அந்த முயற்சியை மேற்கொண்டார். கோபாலபுரம் இல்லத்தில் கலைஞரை சந்தித்த அவர், இரு கட்சிகளும் இணைய நிபந்தனைகளைக் கேட்டறிந்தார். முன்னதாக பேராசிரியர் மற்றும் கழக முன்னணியினருடன் கலந்துபேசி எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு ஏற்ப சில நிபந்தனைகளை கலைஞர் முன் வைத்தார். இது தொடர்பாக, செப்.13-ஆம் தேதி கலைஞர் - எம் .ஜி. ஆர் சந்திப்பு நடந்த நிலையில், அடுத்த நாள் வேலூரில் நடந்த அ.தி.மு.க. பொதுக்கூட்டத்தில், தி.மு.க.வையும், கலைஞரையும் தரக்குறைவாகப் பேசியதை ரசித்தார் எம்.ஜி.ஆர். ஒரே நாளில் அவர் மனமாற்றம் அடைந்திருந்தார்.**

---

## கூட்டுறவு தமிழ்நாடு!

விவசாயிகளின் உற்பத்தியை நேரடியாக விற்பனை செய்ய உழவர் சந்தை அமைத்தார் கலைஞர். கலைஞர் நூற்றாண்டில் அதன் நவீன வடிவத்தை நிகழ்த்தியுள்ளார் நமது முதலமைச்சர்.

சமீபத்தில், கூட்டுறவுத்துறை பொருட்கள் மக்களுக்கு நேரடியாக வீடுகளுக்கே சென்று சேரும் வகையில், தமிழ்நாடு அரசு அறிமுகம் செய்துள்ளது கூட்டுறவுச் செயலி (COOP Bazaar).




இந்த செயலி மூலம் கூட்டுறவு நிறுவனங்களின் உற்பத்திப்பொருட்கள் தமிழ்நாடு முழுவதும் சென்று சேர உள்ளது. முதற்கட்டமாக 8 கூட்டுறவுச் சங்கங்களின் 64 பொருட்கள் கிடைக்கின்றன. கூட்டுறவு நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் அத்தியாவசியப் பொருட்கள் தவிர, விவசாய இடுபொருட்களும் விற்பனைக்குக் கிடைப்பது புதிய முயற்சியாகும். செயலிகளின் காலத்தில் செயல்படும் நமது அரசு, கூட்டுறவுத் துறைக்கு நவீன வடிவம் கொடுத்து வருகிறது.

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 175




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.